www.Padasalai.Net www.TrbTnpsc.com

# முதல் திருப்புத் தேர்வு - 2025

வகுப்பு : 11 **பொதுத்தமிழ்** பதிவு எண் :

காலம் : 3.00 மணி மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்: (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு: விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி – I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14×1=14

1. பாயிரம் இல்லது __________ அன்றே.

(அ) கவிதை (ஆ) பாடல் (இ) பனுவல் (ஈ) காவியம்

2. பேச்சு என்பது மொழியில் _________.

(அ) பறப்பது (ஆ) நீந்துவது (இ) ஓடுவது (ஈ) மூழ்குவது

3. "வான் பொய்த்தது" – என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள்

(அ) வானம் என்பது பொய்யானது (ஆ) வானம் இடிந்தது

(இ) மின்னல் வெட்டியது (ஈ) மழை பெய்யவில்லை

4. கூற்று: "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.

விளக்கம்: கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.

(அ) கூற்றும் சரி விளக்கமும் சரி (ஆ) கூற்று சரி, விளக்கம் தவறு

(இ) கூற்று தவறு, விளக்கம் சரி (ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

5. தமிழ் இதழ்களில் தமிழ் ஆண்டு, திங்கள், நாள் ஆகியவற்றை முதன்முதலாகக் குறித்தவர் __________

(அ) ரா.அ.பத்மநாபன் (ஆ) வ.ராமசாமி (இ) பாரதியார் (ஈ) என்.நாகசாமி

6. விரைந்து கெடுபவன் யார்?

(அ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

(ஆ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்.

(இ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்.

(ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன். தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

7. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?

(அ) தலைமைத் துவிபாஷி (ஆ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

(இ) மொழிபெயர்ப்பாளர் (ஈ) இந்தியாவின் பெப்பிசு

8. 'அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்' – இக்கூற்று யார் யாரிடம் கூறியது?

(அ) அமைச்சர் மன்னரிடம் (ஆ) மன்னர் அமுதவல்லியிடம்

(இ) அமைச்சர் கவிஞரிடம் (ஈ) மன்னர் அமைச்சரிடம்

9. கெடுக – என்பதன் இலக்கணக்குறிப்புத் தருக.

(அ) வியங்கோள் வினைமுற்று (ஆ) வினைத்தொகை

(இ) தொழில்பெயர் (ஈ) பெயரெச்சம்

M.POOVARASAN M.SC B.Ed
Pg Asst In chemistry
Dharmapuri District



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

10. மொழி விளையாட்டின் மூலம் இறைவனின் பெருமை பேசும் செய்யுள் வகை ________.
(அ) குறவஞ்சி (ஆ) திருச்சாழல் (இ) பள்ளு (ஈ) காவடிச்சிந்து

11. பூஜை, விஷயம், உபயோகம் – என்பவை முறையே ____ என்று தமிழில் வழங்கப்படும்.
(அ) வழிபாடு, பயன்பாடு, செய்தி (ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி
(இ) வழிபாடு, செய்தி, பயன்பாடு (ஈ) பயன்பாடு, செய்தி, வழிபாடு

12. 9 அடி சிற்றெல்லையும் 12 அடிப் பேரெல்லையையும் கொண்ட நூல் ________.
(அ) அகநானூறு (ஆ) ஐங்குறுநூறு
(இ) குறுந்தொகை (ஈ) நற்றிணை

13. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
(அ) காவலாளி (ஆ) மேலாளர் (இ) உதவியாள் (ஈ) ஆசிரியர்

14. தமிழின் முதல் பா வடிவ நாடக நூல் ________.
(அ) இரகசிய வழி (ஆ) மனோன்மணீயம்
(இ) நூல்தொகை விளக்கம் (ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

## பகுதி – II

### பிரிவு –1

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×2=6

15. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?
16. காவடிச்சிந்து என்பது யாது?
17. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?
18. "கற்றேன் என்பாய் கற்றாயா?" – என்று அப்துல் ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?

### பிரிவு – 2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×2=4

19. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
20. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.
21. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

### பிரிவு – 3

எவையேனும் **ஏழனுக்கு** விடை தருக. 7×2=14

22. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.

23. மெய்ப்புத்திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளைத் தருக.
(அ) ʌ (ஆ) Dt

24. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
(கம்பு, மை, வளை, மதி, இதழ்)
(அ) அடிக்கவும் செய்யலாம்; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் _______
(ஆ) அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவேதான் _______

25. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
(அ) கொழுஞ்சோறு (ஆ) புகழெனின்

26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
(அ) நெருங்கின (ஆ) அறிந்து

27. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
கனை, கணை

28. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

29. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
(அ) தங்கை (ஆ) வைகை



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

30. கலைச்சொல்லாக்கம் தருக.

(அ) Document (ஆ) Smartphone

**குறிப்பு:** செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.

மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

(அ) கண்ணாயிருத்தல் (ஆ) மதில்மேல் பூனை

## பகுதி – III

### பிரிவு –1

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×4=8

31. "சலச வாவியில் செங்கயல் பாயும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

33. 'சேரநாடு செல்வ வளம் மிக்கது' என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

34. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

### பிரிவு 2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×4=8

35. மொழி வெளிப்பாட்டின் பகுதிகளாக இந்திரன் குறிப்பிடுவன யாவை?

36. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – நும் கருத்தை எழுதுக.

37. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

38. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

### பிரிவு – 3

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×4=12

39. (அ) வேற்றுமை அணியைச் சான்று தந்து விளக்குக.

**(அல்லது)**

(ஆ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

– இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியைச் சுட்டி விளக்குக.

40. (அ) பாடாண் திணையைச் சான்று தந்து விளக்குக.

**(அல்லது)**

(ஆ) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.

41. 'வா' என்னும் வேர்ச்சொல்லை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரில் அமைத்து எழுதுக.

42. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.

தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ.

– கம்பர்

43. தமிழாக்கம் தருக.

(அ) Look deep into nature and then you will understand everything better.

(ஆ) Education is the most powerful weapon, which you can use to change the world.

(இ) A people without the knowledge of their past history and culture is like a tree without roots.

(ஈ) The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

43. குறிப்பு: செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.

பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

"அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் "பல்கலைப் புலமை" என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. "தமிழ்கெழு கூடல்" என்றவிடத்திலும் "கலைப்புலமை" என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது கம்பன் "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் இடத்து. 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்', பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன "தமிழ் இவை பத்துமே", மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ்மாலை" என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும்.

1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?
2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.
3. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?
4. பத்தியின் மையக்கருத்திற்கேற்ப ஒரு தலைப்பிடுக.

## பகுதி – IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 3×6=18

44. (அ) கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.

**(அல்லது)**

(ஆ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

45. (அ) "இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன". - இக்கூற்றினை மெய்ப்பிக்க.

**(அல்லது)**

(ஆ) 'கல்லும் கதை சொல்லும்' – என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46. (அ) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

**(அல்லது)**

(ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

## பகுதி – V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** 4+2=6

(அ) "நான் என்பாய்...." எனத் தொடங்கும் 'தொலைந்து போனவர்கள்' பாடலை எழுதுக.

(ஆ) "தோன்றின்....." எனத் தொடங்கும் குறளை எழுதுக.

**************



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com